<u>அசல் வழக்கு எண். 43/2019</u>

11.09.2024

**பெயர் – சக்திவேல் த/பெ.பழனிச்சாமி (Dw3)**

<u>**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

(1) என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் முருகேசன் பெயரில் உயில் உள்ளது என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் எதிர்வாதம் யார் முதலில் தாக்கல் செய்தார்கள் என்றால் 1, 2 பிரதிவாதிகள் தான் தாக்கல் செய்தார்கள். நான் இந்த வழக்கில் தனியாக எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஒன்றாக தாக்கல் செய்துள்ளேன். 1, 2 பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்த போது இந்த வழக்கு குறித்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாவாச் சொத்தின் அருகில் உள்ள எனக்கு சொந்தமான பூமியில் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் எனது பூமியில் விவசாயம் செய்த போது வழக்கு நிலுவையில் இருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவாச் சொத்துக்களை கருப்பண்ண கவுண்டரிடமிருந்து சின்னச்சாமி கவுண்டர் கிரையம் பெற்ற விவரம் தெரியுமா என்றால் நாங்கள் கிரையம் பெற்ற போது தெரியும்.

(2) சின்னச்சாமி கவுண்டர் கொள்ளுப்பாளையத்தில் உள்ள 1ம் பிரதிவாதி முத்துச்சாமிக்கு பவர் எழுதி கொடுத்த விவரம் நான் கிரையம் பெற்ற போது தெரியுமா என்றால் முதலிலேயே 2007 ம் ஆண்டே எனக்கு தெரிய வந்தது. 2013 ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் மேற்படி பவர் பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் கிரையம் செய்த போது பார்த்துள்ளேன். பவர் பத்திரம் எதற்காக எழுதப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். நான் கிரையம் பெற்ற போது பார்த்து தெரிந்து கொண்டேன். பவர் பத்திரத்தின் சொத்து விவரத்தில் வண்டித்தடம் சம்மந்தமாக எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக பவர் பத்திரத்தில் என்ன சொத்து விவரம் உள்ளதோ அதைப் பொறுத்து தான் கிரையம் பெற முடியும் அதிகமாக சொத்து விவரத்தை காட்டி கிரையம் செய்ய முடியாது என்றால் சரிதான்.

(3) மேற்படி பவர் பத்திரத்தை இந்த வழக்கின் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பவர் ஏஜென்ட் பத்திரத்தில் கிணறு பாத்தியம் கண்டு

எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணறு பாத்தியத்தை கந்தசாமிக் கவுண்டர் வாங்கினார் என எனக்கு தெரியுமா என்றால் தெரியும் கிணறு பாத்தியம் வாங்கியுள்ளார். பி.வா.சா.ஆ.7 ஆவணமான பவர் ஆவணத்தில் வண்டித்தடம் கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் மாமூல் வண்டித்தடம் என்று தான் கண்டு எழுதப்பட்டுள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.7 ஆவணத்தின் படி கந்தசாமிக் கவுண்டர் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். கந்தசாமிக் கவுண்டர் கிரையம் பெற்ற ஆவணத்தை பார்த்துள்ளேன். கந்தசாமிக் கவுண்டர் கிரையம் பெற்ற ஆவணத்தில் கிணறு கண்டு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல எழுதப்பட்டுள்ளது. கந்தசாமிக் கவுண்டரிடம் இருந்து நான் கிரையம் பெற்ற போது கிணற்றை சேர்த்து எழுதி வாங்கினேன்.

(4) பி.வா.சா.ஆ.10 ஆவணமான பொது அதிகார ஆவணத்தில் கிணறு கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை மாமூல் பாசன பாத்தியங்களும், கழிவு நீர் வாய்க்கால் பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் தட பாத்திய உடன்படிக்கை பற்றி குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொது அதிகார ஆவணத்தில் தட பாத்திய உடன்படிக்கை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொது அதிகார ஆவணம் எந்த சூழ்நிலையில் எழுதப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் 2007 ம் ஆண்டு பக்கத்து காட்டுக்காரர்கள் சொல்லி தெரியும். முத்துச்சாமி 2007 ம் வருடம் பவர் வாங்கிக்கொண்டு கந்தசாமிக்கு விற்பனை செய்து அதற்குண்டான தொகையை பெற்று சின்னச்சாமிக்கு கொடுத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். ஊருக்குள் பேசிக்கொண்டார்கள் எனக்கு நேரடியாக தெரியாது. நான் கிரையம் பெற்ற போது முத்துச்சாமி பவர் பெற்றுக்கொண்டு பவர் ஏஜெண்ட்ப்படி சின்னச்சாமிக்கு தொகையை செலுத்திய ரசீதை பார்த்தேனா என்றால் இல்லை. பொது அதிகார ஆவணத்தில் விற்பனை செய்தால் கணக்கு காட்டவேண்டும் என்று கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது.

(5) சின்னச்சாமி கவுண்டருக்கு தொகை செலுத்திய ரசீதுகளை நான் பார்க்கவில்லை. இவ்வழக்கில் நான் எதிர்வாதம் தாக்கல் செய்த போது முருகேசனுக்கு உயில்படி பாத்தியம் என்று வழக்கு தாக்கல் செய்து அழைப்பாணை வந்த போது எனக்கு தெரியும். மேற்படி உயில் ஆவணத்தை நான் பார்க்கவில்லை. மேற்படி உயில் ஆவணம் எப்போது என்ன காரணத்திற்காக எழுதப்பட்டது என்ற விவரம் தெரியாது என்றால் 2008

ஆண்டு ஒரு உயிலும், 2010 ஆண்டு ஒரு உயிலும் ஏற்படுத்தப்பட்டது எனக்கு தெரியும். மேற்படி உயில் ஆவணத்தில் என்ன ஷரத்துக்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது, அது பதிவு செய்யப்பட்ட உயிலா என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு தெரியாது நான் பார்க்கவில்லை. மேற்படி உயில் ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்த போது நான் பார்த்தேனா என்றால் இல்லை. நான் கிரையம் பெற்ற தாவாச் சொத்தில் கோவில் உள்ளது என்றால் சரிதான். அந்த கோவிலில் யார் பூஜை செய்து பராமரித்து வந்தார் என்றால் சின்னச்சாமி அனுபவித்து வந்த போது அவர் தான் பராமரித்து வந்தார்.

வாதி தரப்பில் தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.09.11 22:21:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்